அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை :10/2014

எனது இல: - EST-3/CERTI/06/9436
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2014.04.23

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் உள்ளடக்கப்படவுள்ள வேறு கல்வித் தகைமைகள்**

ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ளடக்கப்பட்ட கல்வித் தகைமைகள் மற்றும் இந் நோக்கத்திற்காக ஏற்புடையதாக்கப்படக்கூடிய வேறு மாற்றீடான கல்வித் தகைமைகள் தொடர்பில் 1977.03.09 ஆம் திகதிய 234 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கைக் கடிதம், 1987.09.25 ஆம் திகதிய 379 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை, 1990.10.30 ஆம் திகதிய 46/90 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை, 1994.06.20 ஆம் திகதிய 46/90 (I) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை, 1995.10.09 ஆம் திகதிய 46/90 (II) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை, 2010.01.15 ஆம் திகதிய 46/90 (III) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை, 2011.10.13 ஆம் திகதிய 46/90 (IV) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2012.05.10 ஆம் திகதிய 46/90 (V) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை ஆகியவற்றில் விதித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் குறித்து பின்வரும் விடயங்கள் மீது தங்களின் கவனம் இத்தால் ஈர்க்கப்படுகின்றது.

02. (அ) பதவிகளுக்குப் பொருத்தமான ஆட்களின் ஆட்சேர்ப்புக்கு உதவும் நோக்குடன் நியமன அதிகாரிகளின் தேவைப்பாட்டினைச் சார்ந்து ஆட்சேர்ப்பு நடைமுறைக்குள் அத்தகைய பதவிகளுக்காக தேவைப்படுத்தப்படும் கல்வித் தகைமைகளின் உள்ளடக்கத்துடன் மேற்படி சுற்றறிக்கைகள் மூலம் தகைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) மேற்படி சுற்றறிக்கைகள் மூலம் கல்வித் தகைமைகளானவை ஒருவருக்கொருவர் சமமாக்கப்பட்டிருந்தாலுங்கூட அத்தகைய ஒவ்வொரு கல்வித் தகைமைக்கும் தனித்துவமான இயல்புகளை அத்தகைய கல்வித் தகைமைகள் தாங்கியிருப்பதனால் சமமாகக் கருதப்படும் கல்வித் தகைமைகளை கருத்திற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கும் போது நியமன அதிகாரிகள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளார்கள் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

(இ) கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் மற்றும் காலத்திற்குக் காலம் பாடத்திட்டங்களில் ஏற்படுத்தப்படும் திருத்தங்கள் என்பவற்றின் விளைவாக சான்றிதழ்களிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆதலினால் சுற்றறிக்கைகள் மூலம் மாற்றீடான தகைமைகளாக அறிமுகப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைகளை ஒரே விதத்தில் மாற்றீடான தகைமைகளாக இனங்காண்பது பிரச்சினையாக மாறும்.

(ஈ) ஆதலினால் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளும் போது, குறித்த பதவி ஒன்றிற்குத் தேவைப்படுத்தப்படும் கல்வித் தகைமைகள் தொடர்பில் தீர்மானம் ஒன்றினை மேற்கொள்வதற்கான உரிமையானது ஏனைய அதிகாரிகளின் இணக்கத்துடன் நியமன அதிகாரிக்கு பொறுப்பளிக்கப்படல் வேண்டும். எனினும், அப் பதவிக்கு தேவைப்படுத்தப்படும் கல்வித் தகைமைகள் அல்லது மாற்றீடான கல்வித் தகைமைகளை உள்ளடக்குவதற்கான சந்தர்ப்பமானது மேற்படி சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் மூலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

03. மேற்படி பந்தி 2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கவனத்திற்கொண்டு ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் உள்ளடக்கப்படவுள்ள வேறு கல்வித் தகைமைகள் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள 1977.03.09 ஆம் திகதிய 234 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கைக் கடிதம், 1987.09.25 ஆம் திகதிய 379 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை, 1990.10.30 ஆம் திகதிய 46/90 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை, 1994.06.20 ஆம் திகதிய 46/90 (I) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை, 1995.10.09 ஆம் திகதிய 46/90 (II) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை, 2010.01.15 ஆம் திகதிய 46/90 (III) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை, 2011.10.13 ஆம் திகதிய 46/90 (IV) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2012.05.10 ஆம் திகதிய 46/90 (V) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை ஆகியவற்றை அச் சுற்றறிக்கைகளுக்குப் பொருத்தமாக இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எந்தவித குந்தகமும் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு இரத்துச் செய்வதற்கு 2013.12.16 ஆம் திகதியில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது.

04. மேலுள்ளவாறு இரத்துச்செய்யப்படும் சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகளை குறித்தவொரு சேவைப்பிரமாணக் குறிப்பு அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறைக்குள் உள்ளடக்குவதற்கு எதிர்காலத்தில் ஏதேனும் அவசியம் எழுந்தால் உயர்கல்வி அமைச்சிடமிருந்தான பரிந்துரைகளைப் பெற்றும் உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டும் ஒன்றில் நியமன அதிகாரியினால் அல்லது நிர்வாக அதிகாரியினால் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட முடியும்.

உதாரணம்:- இலங்கை கணக்காளர் சேவைப்பிரமாணக் குறிப்பின் பிரிவு 7:2:2:1 இன் கல்வித் தகைமைகளின் கீழ் குறிப்பிடப்பட்ட ஏற்கனவேயுள்ள உப பந்தி (II):

"இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம் / இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியிடமிருந்தான உயர் கணக்கியல் அல்லது வர்த்தக டிப்ளோமாதாரியாக இருத்தல் வேண்டும்"

5. அதற்கிணங்க, மேற்படி விதத்தில் பதவிகளுக்குப் பொருத்தமானகல்வித் தகைமைகளை சேவைப்பிரமாணக் குறிப்பு அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறைக்குள் உள்ளடக்குவதற்கு நியமன அதிகாரிகள்/ நிர்வாக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒப்பம்/பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு